## தமிழில் ஜெபமாலை

தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே, ஆமென்.

### நம்பிக்கை அறிக்கை

விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகின்றேன். அவருடைய ஒரே மகனாகிய, நம் ஆண்டவர், இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன். இவர் தூய ஆவியால் கருவுற்று, கன்னி மரியிடமிருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய, கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார். அங்கிருந்து வாழ்வோருக்கும், இறந்தோருக்கும், தீர்ப்பு வழங்க வருவார். தூய ஆவியானவரை நம்புகின்றேன். புனித கத்தோலிக்க திரு அவையை நம்புகின்றேன். புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகின்றேன். பாவ மன்னிப்பை நம்புகின்றேன். உடலின் உயிர்ப்பை நம்புகின்றேன். நிலைவாழ்வை நம்புகின்றேன். ஆமென்

### விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக. உமது ஆட்சி வருக. உமது திருவுளம், விண்ணுலகில் நிறைவேறுவது போல, மண்ணுலகிலும் நிறைவேறுக.

எங்கள் அன்றாட உணவை, இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை, மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

## அருள் நிறைந்த மரியே மூன்று முறை

அருள் நிறைந்த மரியே வாழ்க. ஆண்டவர் உம்முடனே. பெண்களுக்குள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும், ஆசீர் பெற்றவரே.

புனித மரியாயே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும், எங்கள் இறப்பின் வேளையிலும், வேண்டிக்கொள்ளும். ஆமென்.

## தந்தைக்கும் மகனுக்கும்

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக. தொடக்கத்தில் இருந்ததுபோல, இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

## ஓ என் இயேசுவே

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். எங்களை நரக நெருப்பிலிருந்து மீட்டருளும். எல்லாரையும் விண்ணுலகப் பாதையில் நடத்தியருளும். உமது இரக்கம் யாருக்கு அதிகம் தேவையோ, அவர்களுக்குச் சிறப்பான உதவி புரியும்.

**குறிப்பு: ஒவ்வொரு பத்து மணிக்கு பிறகும் சொல்ல வேண்டியது.**

**மகிழ்ச்சி நிறை மறை உண்மைகள்:**

**(திங்கள், சனி)**

1. கபிரியேல் தூதர் கன்னிமரியாவுக்கு மங்கள வார்த்தை சொன்னதை தியானித்து, தாழ்ச்சி என்னும் வரத்தைக் கேட்டுச் செபிப்போமாக.
2. கன்னி மரியாள் எலிசபெத்தம்மாளைச் சந்தித்ததைத் தியானித்து, பிறரன்பு என்னும் வரத்தைக் கேட்டு செபிப்போமாக.
3. இயேசு பிறந்ததைத் தியானித்து, எளிமை என்னும் வரத்தைக் கேட்டு செபிப்போமாக.
4. இயேசு கோயிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்ததை தியானித்து, இறைவனின் திருவுளத்துக்குப் பணிந்து நடக்கும் வரத்தைக் கேட்டு செபிப்போமாக.
5. காணாமற் போன இயேசுவைக் கண்டடைந்ததை தியானித்து, நாம் அவரை எந்நாளும் தேடும் வரத்தைக் கேட்டு செபிப்போமாக.

**துயர் மறை உண்மைகள்:**

**( செவ்வாய், வெள்ளி)**

1. இயேசு இரத்த வியர்வை சிந்தியதைத் தியானித்து, நம் பாவங்களுக்காக மனத்துயர் அடைய செபிப்போமாக!
2. இயேசு கற்றூணில் கட்டுண்டு அடிப்பட்டதைத் தியானித்து, புலன்களை அடக்கி வாழும் வரம் கேட்போமாக!
3. இயேசு முள்முடி தரித்ததைத் தியானித்து, நம்மையே ஒடுக்கவும், நிந்தை தோல்விகளை மகிழ்வுடன் ஏற்கவும் செபிப்போமாக!
4. இயேசு சிலுவை சுமந்து சென்றதைத் தியானித்து, வாழ்க்கைச் சுமையை பொறுமையோடு ஏற்று வாழச் செபிப்போமாக!
5. இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்ததைத் தியானித்து, இயேசுவை அன்பு செய்யவும், பிறரை மன்னிக்கவும் வரம் கேட்போமாக!

**மகிமை நிறை மறை உண்மைகள்:**

**( புதன், ஞாயிறு )**

1. இயேசு உயிர்த்தெழுந்ததைத் தியானித்து, உயிருள்ள விசுவாசத்துடன் வாழ செபிப்போமாக!
2. இயேசுவின் விண்ணேற்றத்தைத் தியானித்து, நம்பிக்கையுடன் விண்ணக வாழ்வைத் தேடும் வரம் கேட்போமாக!
3. தூய ஆவியாரின் வருகையைத் தியானித்து, நாம் அனைவரும் ஆவியாரின் ஒளியையும் அன்பையும் பெற செபிப்போமாக!
4. இறையன்னையின் விண்ணேற்பைத் தியானித்து, நாமும் விண்ணக மகிமையில் பங்குபெற செபிப்போமாக !
5. இறையன்னை விண்ணக மண்ணக அரசியாக மணிமுடி சூட்டப் பெற்றதைத் தியானித்து, நம் அன்னையின் மீது ஆழ்ந்த பக்தி கொள்ள செபிப்போமாக !

**ஒளி நிறை மறை உண்மைகள்:**

**(வியாழக் கிழமை)**

1. இயேசு யோர்தான ஆற்றில் திருமுழுக்கு பெற்றதை தியானிப்போமாக !
2. கானாவூர் திருமணத்தில் இயேசு தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றியதை தியானிப்போமாக !
3. இயேசு விண்ணரசைப் பறைசாற்றியதை தியானிப்போமாக !
4. இயேசு தாபோர் மலையில் உருமாற்றம் பெற்றதை தியானிப்போமாக !
5. இயேசு கடைசி இரா விருந்துண்டதையும் நற்கருணை ஏற்படுத்தியதையும் தியானிப்போமாக !

**ஜெபமாலை நிறைவில்:**

அதிதூதரான புனித மிக்கேலே, தேவதூதர்களான புனித கபிரியேலே, ரபேலே, அப்போஸ்தலர்களான புனித இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும், நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த ஜம்பத்து மூன்று மணிசெபத்தையும் உங்கள் ஸ்தோத்திரங்களோடே ஒன்றாகக் கூட்டி, புனித தேவமாதாவின் திருப்பாதத்தில், பாத காணிக்கையாக வைக்க உங்களைப் பிராத்தித்துக் கொள்கிறோம். ஆமென்.

**புனித தேவமாதாவின் பிராத்தனை**

சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே கிருபையாயிரும்
சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே எங்கள் பிராத்தனையைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் பிராத்தனையை நன்றாகக் கேட்டருளும்

பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா
**எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி**
உலகத்தை மீட்டு இரட்சித்த சுதானாகிய சர்வேசுரா
**எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி**
தூய ஆவியாகிய சர்வேசுரா - **எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி**

புனித மரியோயே **-எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**
சர்வேசுரனுடைய புனித மாதாவே -எங்களுக்காக …
கன்னியாஸ்திரீகளின் உத்தம கன்னிகையே …
மகா அன்பிற்கு பாத்திரமாயிருக்கிற மாதாவே…
கிறிஸ்துவினுடைய மாதாவே…
தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே…

மகா பரிசுத்த மாதாவே...
அத்தியந்த விரத்தியாயிருக்கிற மாதாவே..
பழுதற்ற கன்னிகையாயிருக்கிற மாதாவே...
கன்னி சுத்தங்கெடாத மாதாவே...
மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கற மாதாவே...
ஆச்சரியத்துக்குரிய மாதாவே...
நல்ல ஆலோசனை மாதாவே...
சிருஷ்டிகருடைய மாதாவே...
இரட்சகருடைய மாதாவே...
மகா புத்தியுடைத்தான கன்னிகையே...
மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே...
பிரகாசமாய் ஸ்துதிக்கப்பட்ட யோக்கியமாயிருக்கிற கன்னிகையே...
சக்தியுடைத்தவளாயிருக்கிற கன்னிகையே...
தயையுள்ள கன்னிகையே...
விசுவாசியாயிருக்கிற கன்னிகையே....
தருமத்தின் கண்ணாடியே...
ஞானத்துக்கு இருப்பிடமே...
எங்கள் சந்தோஷத்தின் காரணமே...
தேவ இரகசியத்தைக் கொண்டிருக்கிற ரோஜா புஷ்பமே...
ஞான பாத்திரமே...
மகிமைக்குரிய பாத்திரமே...
அத்தியந்த பக்தியுடைத்தான பாத்திரமே...
தாவீது இராஜாவுடைய உப்பரிகையே...
தந்த மயமாயிருக்கிர உப்பரிகையே...
சொர்ண மயமாயிருக்கிற ஆலயமே...
வாக்குத்தத்தத்தின் பெட்டகமே...
பரலோகத்தினுடைய வாசலே...
விடியக்காலத்தின் நட்சத்திரமே...
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே...

பாவிகளுக்கு அடைக்கலமே…
கஸ்திப்படுகிறவர்களுக்கு தேற்றரவே…
கிறிஸ்தவர்களுடைய சகாயமே…
சம்மனசுக்களுடைய இராக்கினியே…
பிதா பிதாக்களுடைய இராக்கினியே…
இறைவாக்கினர்களுடைய இராக்கினியே…
அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே…
மறைசாட்சிகளுடைய இராக்கினியே…
துதியர்களுடைய இராக்கினியே…
கன்னியர்களுடைய இராக்கினியே…
அனைத்துப் புனிதர்களுடைய இராக்கினியே…
ஜென்ம பாவமின்றி உற்பவித்த இராக்கினியே…
பரலேகத்துக்கு ஆரோபணமான இராக்கினியே…
திருச் செபமாலையின் இராக்கினியே…
சமாதானத்தின் இராக்கினியே…

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே
**எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி**
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே
**எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி**
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே
**எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி**

சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே ! இதோ உம்முடைய சரணமாக ஓடிவந்தோம். எங்கள் அவசரங்களிலே, நாங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்குப், பாராமுகமாய் இராதேயும். ஆசீர்வதிக்கப்பட்டவளுமாய், மோட்சமுடையவளுமாயிருக்கிற நித்திய கன்னிகையே ! சகல ஆபத்துக்களிலேயும் நின்று எங்களைத் தற்காத்துக் கொள்ளும். **-ஆமென்**.

இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு, நாங்கள் தகுதியுள்ளவர்கள் ஆகும்படி -
**சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**ஜெபிப்போமாக :**

இறைவா! முழுமனதோடே தெண்டனாக விழுந்துகிடக்கிற, இந்த குடும்பத்தைப் பார்த்து, எப்பொழுதும் பரிசுத்த கன்னியான, மரியாளுடைய வேண்டுதலினாலே, சகல சத்துருக்களின் சற்பனையிலே நின்று, பிரசன்னராய்த் தயை செய்து இரட்சியும். இந்த மன்றாட்டுக்களை எல்லாம், எங்கள் ஆண்டவரான இயேசுநாதருடைய, திருமுகத்தைப் பார்த்து, எங்களுக்குத் தந்தருளும். -**ஆமென்**

**கிருபை தயாபத்து மந்திரம்**

- கிருபை தயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க! எங்கள் ஜீவியமே, எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமே வாழ்க! பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவையின் மக்கள், உம்மைப் பார்த்து கூப்பிடுகிறோம்.
- இந்தக் கண்ணீர்க் கணவாயிலே நின்று பிரலாபித்தழுது, உம்மையே நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம்.
- ஆதலால் எங்களுக்காக வேண்டி மன்றாடுகிற தாயே, உம்முடைய தயாளமுள்ள திருக்கண்களை எங்கள் பேரில் திருப்பியருளும்.
- இதன்றியே நாங்கள் இந்தப் பரதேசம் கடந்த பிற்பாடு உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுநாதருடைய பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும்.
- கிருபாகரியே, தயாபரியே, பேரின்ப இரசமுள்ள கன்னிமரியாயே!

- இயேசு கிறிஸ்து நாதருடைய, திரு வாக்குத்தத்தங்களுக்கு, நாங்கள் பாத்திரவான்களாய் இருக்கத்தக்கதாக -
**சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**
**-ஆமென்**.

**ஜெபிப்போமாக:**

சர்வ சக்தியுடையவருமாய் நித்தியருமாய் இருக்கிற இறைவா! முத்திபேறுபெற்ற கன்னித்தாயான மரியாயினுடைய ஆத்துமமும் சரீரம் தூய ஆவியின் அனுக்கரகத்தினாலே தேவரீருடைய திருமகனுக்கு யோக்கியமான பீடமாயிருக்க ஏற்கெனவே நியமித்தருளினீரே. அந்த திவ்விய தாயை நினைத்து மகிழ்கிற நாங்கள் அவளுடைய இரக்கமுள்ள மன்றாடினாலே இவ்வுலகில் சகலப் பொல்லாப்புக்களிலேயும் நித்திய மரணத்திலேயும் நின்று இரட்சிக்கப்படும்படிக்கு கிருபை கூர்ந்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய இயேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். -ஆமென்.

**Saint Michael Prayer:**

Saint Michael the Archangel, defend us in the day of battle.
Be our safeguard against the wickedness and the snares of the devil.
May God rebuke him we humbly pray and do thou O Prince of the Heavenly Host,
cast into hell Satan and all the evil spirits who prowl throughout the world
seeking the ruin of souls. Amen

**பரிசுத்த பாப்பரசரின் கருத்துக்கள் நிறைவேறும் படியாக ஜெபிப்போமாக :**

ஒரு பரலோக மந்திரம்,
ஒரு அருள் நிறைந்த மந்திரம் மற்றும்
ஒரு திரித்துவத் துதி சொல்வோம்.

தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே, ஆமென்.